Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW7** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மோகன்ராஜ் |
| Father Name | : | சண்முகம் |
| Village | : | பொட்டகவயல், |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | எலக்ட்ரீசியன் |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் பரமக்குடி தாலுகா பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். சாட்சி சேகரை தெரியும். இறந்துபோன கர்ணனை தெரியும். கடந்த 18.07.2021ம் தேதி நானும், சாட்சி சேகரும் இரவு 02.40 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன்கோவில் அருகே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம், அப்போது காவல் ஆய்வாளர் அங்கு வந்து வரைபடம் வரைந்தார். அதற்கு சாட்சியாக கையெழுத்து போடும்படி கேட்டார். கையெழுத்து போட்டோம். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகசர் அ.சா.ஆ.3. மேலும் அதே இடத்தில் பச்சை வெள்ளை கட்டம்போட்ட துண்டு ஒன்றையும், இரத்தம்பட்ட சிமிண்ட் துகள்களையும், இரத்தம்படாத சிமிண்ட் துகள்களையும், இரத்தம்பட்ட

முண்டுக்கல்லையும் கைப்பற்றினார். அப்போது ஒரு அத்தாட்சி தயார் செய்தார். அதில் நானும், சேகரும் கையெழுத்து செய்தோம். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4. போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றிய பொருட்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் முண்டுக்கல்தான் போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியது. நீதிமன்றத்தில் காட்டப்படும் கைலி மற்றும் இரத்தம்பட்ட சிமிண்ட் துகள்கள், இரத்தம்படாத சிமிண்ட் துகள்கள், துண்டு எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

மாரியம்மன் கோவிலுக்கு எந்த திசையில் போலிசார் வரைபடம் வரைந்தார்கள் என்றால் தெரியாது. வரைபடம் வரைந்த காவல் அதிகாரி யார் என தெரியாது என்றால் சரியல்ல, ஆய்வாளர் வரைந்தார். நான் இரண்டு கையொப்பங்கள் போட்டுக்கொடுத்தேன். நான் கையொப்பமிட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் ஒன்று வரைபடம் என்றால் சரிதான். மற்றொன்று அத்தாட்சியில் கையெழுத்து போட்டேன். வரைபடம், அத்தாட்சி தவிர வேறு எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். வரைபடம் தயார்செய்து நான் கையெழுத்து போட்டபோது நேரம் இரவு 02.45 மணி இருக்கும். முதலில் வரைபடம் ஆய்வாளர் தயார் செய்தார். அத்தாட்சி தயார் செய்வதற்கு எத்தனை மணி நேரம் ஆனது என்றால் 1 மணி நேரம். நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்யும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 03.45 மணி. நான் கையொப்பம் இட்ட அத்தாட்சியில் என்னென்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் போலிசாருக்குத்தான் தெரியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் துண்டு முழுவதும் இரத்தக்கரை இருந்ததா என்றால் இருந்தது. சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் கருங்கல்லிலும் இரத்தம் இருந்தது என்றால் சரிதான். துண்டையும், கருங்கல்லையும் எங்கு வைத்து

மாரியம்மன் கோவிலுக்கு எந்த திசையில் வைத்து கைப்பற்றினார்கள் என்றால் துண்டு மாரியம்மன் கோவிலுக்கு மேற்கேயும், கல் கிழக்கேயும் வைத்து கைப்பற்றினார். நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், விதத்தில் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக போலிசார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW6** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | முகம்மது ஹக்கீம் |
| Father Name | : | சீனிமுகம்மது |
| Village | : | பொட்டகவயல் |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் பரமக்குடி தாலுகா பொட்டகவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன கர்ணனை தெரியும். 17.07.2021ம் தேதி இரவு 08.30 மணியளவில் நான் என் ஊரில் இருந்தேன், அப்போது ஆம்புலன்ஸ் வேண்டும் என்று வடக்குத்தெருவில் இருந்து எனக்கு போன் வந்தது. நான் ஆம்புலன்ஸ் எடுத்துக்கொண்டு பொட்டகவயல் வடக்குத்தெரு மாரியம்மன் கோவில் பக்கத்தில் தலையில் இரத்தக்காயத்துடன் இருந்த கர்ணன் என்பவரை ஆம்புலன்சில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். மருத்துவமனையில் இரவு 10.45 மணியளவில் கர்ணன் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். ஆம்புலன்சில் இறந்த கர்ணனின் மனைவி மற்றும் இரண்டு ஆண் நபர்கள் வந்தார்கள். அவர்கள் யார் என்று தெரியாது, அதற்கு பின்பு நான் ஆம்புலன்சை எடுத்துக்கொண்டு

ஊருக்கு வந்துவிடடேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் என் வீட்டில் இருக்கும்போது இரவு 08.15 மணியளவில் போன் வந்தது. வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். நான் வழக்கு சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு ஊரைச்சேர்ந்த 50 நபர்கள் இருந்தார்கள். வழக்கு சம்பவம் நடந்த பிறகு எத்தனை மணி நேரம் கழித்து சென்றேன் என்றால் எனக்கு தகவல் கிடைத்த உடன் சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். தகவல் கிடைத்து நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு போலிசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் நான் போன பிறகு தான் வந்தார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு நான் கர்ணனை கொண்டு செல்லும்போது இரவு 10.00 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 25 கிமீ. சம்பவ இடத்திற்கும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு 15 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரியல்ல, 30 நிமிடங்கள் ஆகும். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் கர்ணன் இறந்துவிட்டார் என்று சொன்ன உடன் கிளம்பிவிட்டேன். பொட்டகவயல் கிராமத்தில் வசிப்பவர்களுடைய பெயர், முகவரி, அடையாளங்கள் தெரியும் என்றால் சரிதான். என்னுடன் ஆம்புலன்ஸில் வந்த நபர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது, கர்ணனின் மனைவி மட்டும் தெரியும். வழக்கு சம்மந்தமாக என்னை யார் விசாரித்தார்கள் என்றால் 18ம் தேதி காலை 11.00 மணிக்கு ஆய்வாளர் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். மாரியம்மன் கோவிலுக்கு மேற்கே காயப்பட்டு கர்ணன் கிடந்தார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், இறந்துபோன கர்ணனை நான் ஆம்புலன்ஸில் கொண்டு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.